02.02.2024

O.S.No. 221/2016

வா.சா.1 .திரு.பிரான்சில் பாஸ்டின்    த.பெ.பிரான்சிஸ் இருதயராஜ்

சாட்சி இன்று  அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டார்

**1**ம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை

இந்த வழக்கை நான் எதற்காக தாக்கல் செய்துள்ளேன் என்றால் பிரதிவாதிகள் தாவா சொத்தை எனது அனுபவத்தை இடையூறு செய்துள்ளதால் நான் தாக்கல் செய்துள்ளேன். தாவா சொத்தை 1995ல் விஜயா என்கிற மரகதராணி என்பவரிடமிருந்து கிரையம் பெற்றேன். தாவா சொத்தை 1997ம் ஆண்டு நான் அந்தோணிக்கு விற்பனை செய்துவிட்டு பின்பு 2010ம் ஆண்டு அந்தோணி சகோதரரிடமிருந்து நான் கிரையம் பெற்றேன். தாவா சொத்து சர்வே எண்.385/1B3-ல் அடங்கியுள்ள 3 ஏக்கர் 57 செண்ட் நிலம் ஆகும். அந்தோணியும், அன்பரசனும் சகோதரர்கள் என்ற விவரம் எனக்கு தெரியும் என்றால் அந்தோணி இறந்த பின்பு தான் அந்த சங்கதி எனக்கு தெரியும். நான் தாவா சொத்தை 2010ல்  கிரையம் வாங்கும் முன்பு ஜேசுராஜ் என்ற அன்பரசனிடமிருந்து 17.10.2006ம் தேதியன்று வெண்ணிலை கிரைய ஒப்பந்தம் ஏற்படுத்திக் கொண்டேன். அதன்பின்பு அவரிடமிருந்து 12,03.2009ம் ஆண்டு நான் பதிவு செய்யப்பட்ட கிரைய ஒப்பந்தம் ஏற்படுத்திக் கொண்டேன் அதனடிப்படையில் 2010ம் ஆண்டு அவரிடமிருந்து தாவா சொத்தை கிரையம் பெற்றேன். அந்தோணியையும், அன்பரசனையும் எனக்கு நன்கு தெரியும் என்றால் அந்தோணியிடம் நான் எனது சொத்தை கிரையம் கொடுத்தபோது அந்தோணியை தெரியும். அவரது இறப்புக்கு பின்பு தாவா சொத்தை நான் அந்தோணியின் சகோதரர் ஜேசுராஜ் என்ற அன்பரசனிடம் கிரைய ஒப்பந்தம் ஏற்படுத்தியபோது அவரை எனக்கு தெரியும். வா.சா.ஆ.1 கிரைய ஒப்பந்தத்தில் இரண்டாவது பக்கத்தில் எழுதிக் கொடுத்ததாக ஒப்புக் கொண்டவரின் புகைப்படம் யாருடைய புகைப்படம் என்றால் அன்பரசனின் சகோதரர் இறந்துபோன அந்தோணியின் புகைப்படம். ஆனால் அன்பரசன் மேற்படி கிரைய உடன்படிக்கை பதியும்போது உடன் வந்தார். புகைப்படத்தை மாற்றிக் கொடுத்துள்ளார். அன்பரசனுக்கு கண் பார்வை தெரியுமா என்றால் பகுதி தெரியும். அவரால் படிக்கவும் முடியும், கையொப்பம் இடவும் முடியும். அவருக்கு கண்பார்வை குறைபாடு காரணமாக அவரால் படிக்க முடியாது என்றாலும் கையொப்பம் மட்டும் தான் போட முடியும் என்றாலும் சரியல்ல. கண் அருகே வைத்து படிக்க கூடிய அளவுக்கு கண் பார்வை உடையவர். அன்பரசனிடமிருந்து நான் தாவா சொத்தை எவ்வளவு தொகைக்கு கிரையம் பெற்றேன் என்றால் ரூ11,35,000/- அல்லது ரூ.11,85,000/- என்று எனக்கு சரியாக ஞாபகம் இல்லை. மேற்படி, கிரைய தொகையை நான் ரொக்கமாக கொடுத்தேனா, காசோலை மூலமாக கொடுத்தேனா என்றால் ரூ.35,000/- அன்பரசனின் அதிகாரம் பெற்ற முகவர் அந்தோணிசாமி என்கிற ராஜாவிடம் ரொக்கமாக கொடுத்தேன். கிரைய ஒப்பந்தத்தில் காணப்படும் அட்வான்ஸ் தொகையை காசோலை மூலமாகவும், மீதி தொகையான ரூ.8,35,000/- நான் பல தவணைகளாக கொடுத்துள்ளேன். அந்தோணிசாமி என்கிற ராஜா என்பவர் அன்பரசனை ஏமாற்றிவிட்டார் என்று அன்பரசன் அவர் மீது அசல் வழக்கு எண்.124/2008 என்ற வழக்கை இந்த நீதிமன்றத்தில் தாக்கல் செய்த விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியும். நான் அந்தோணிசாமி என்கிற ராஜாவிடம்

17.10.2006ம் ஆண்டு கிரைய உடன்படிக்கையின் அடிப்படையில் அட்வான்ஸ் தொகையாக ரூ.35,000/- கொடுத்த பின்பு அதே சொத்தை ஜக்குபார் என்வருக்கு 25.10.2006ல் கிரைய ஒப்பந்தம் எழுதிக் கொடுத்துள்ளார். அதை பயன்படுத்தி 25.11.2006ம் தேதியன்று ஜக்குபாருக்கு கிரைய ஆவணம் எழுதிக் கொடுத்துள்ளார். இதை கண்டுபிடித்து அன்பரசன் அந்தோணிசாமி என்கிற ராஜாவுக்கு கொடுத்த பவர் பத்திரத்தை 2007ம் ஆண்டு மார்ச் மாதம் ரத்து செய்துவிட்டார். அதனால்தான் அன்பரசன் அசல் வழக்கு எண்.124/2008 வழக்கை தாக்கல் செய்துள்ளார். அந்த வழக்கு ஜேசுராஜ் என்ற அன்பரசனுக்கு ஆதரவாக தீர்ப்பு வழங்கப்பட்டது. அந்த வழக்கின் மேல்முறையீடு தாக்கல் செய்து அந்த மேல்முறையீடும் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அன்பரசனுக்கு ஆரம்பத்திலிருந்து எனது சொந்த காசை செலவு செய்து எல்லா வழக்குகளையும் நான் தான் நடத்தி வருகிறேன். கிரைய ஆவணத்தில் யார், யார் யார் தரப்பில் சாட்சி கையொப்பமிட்டுள்ளார்கள் என்றால் எனது தரப்பில் பாண்டியன் என்ற ஒருவரும், ஜேசுராஜ் என்கிற அன்பரசன் தரப்பில் திருச்சியில் உள்ள ஒரு நபரும் சாட்சி கையொப்பமிட்டுள்ளார். 1ம் பிரதிவாதி ஜேசுராஜ் என்கிற அன்பரசன் என்பவரிடம் நான் கூறுவதுபோல் தாவா சொத்தை பொறுத்து எனக்கு எந்தவித கிரைய ஒப்பந்தமும் எழுதிக் கொடுக்கவில்லை என்றாலும், அவருக்கு வழக்கு நடத்துவதற்கு நான் உதவியாக இருந்ததால் அவரை ஏமாற்றி வா.சா.ஆ.2 கிரைய ஆவணத்தை எழுதி வாங்கிக் கொண்டேன் என்றால் சரியல்ல. எனவே, நான் தாவா சொத்தின் உரிமையாளர் என்ற அடிப்படையில் சுவாதீனத்தில் இருப்பதாக சொல்லி தாக்கல் செய்துள்ள இந்த வழக்கு சட்டப்படி நிலைக்கத்தக்கதல்ல என்றாலும், தள்ளுபடி செய்யப்படவேண்டியது என்றாலும் சரியல்ல.